26

# திருக்குறளில் கல்வியியல் சிந்தனைகள்

**முனைவர். ப. விக்னேஸ்வரி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**நேரு கலை மற்றும்அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்** – 105.
**மின்னஞ்சல்** :vigneshwari.cbe@gmail.com

**முன்னுரை**

அறம், பொருள், இன்பம் என்ற மூன்று நிலையில் அனைத்து உலகச் செய்திகளையும் கொண்டுள்ள இலக்கியப் பேழை திருக்குறளாகும். வள்ளுவர் ஈடும் எடுப்பும் அற்ற ஒரு சமுதாய சிற்பி. மக்கள் அனைவரும் ஒரே குலத்தார் போன்று வாழ வேண்டும் என்று விரும்பினார். அவர்கள் வாழ்ந்து சிறப்பு அடைவதற்கு அறமே சிறந்த அடிப்படை என்று கண்டார். கல்வி விளக்கம், கல்வி கற்பதன் நோக்கம் ,கல்வி கற்பதனால் ஏற்படும் நன்மைகள் ,கல்வியின் சிறப்பு, கல்லாததால் ஏற்படும் விளைவுகள் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது

**கல்வியின் நோக்கம்**

கல்வி என்பது அறிவை புகட்டுவதற்காக மட்டும் அல்ல ஒரு மனிதனுக்கு உயரிய பண்புகளை போதித்து அவனை மேன்மையான மனிதனாக செய்வதே கல்வியின் உண்மையான நோக்கமாகும்.

“அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தர்மங்கள் யாவும்
பெயர் விளங்க ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவுத்தல்” (பா.கவி)

என்ற பாரதியாரின் வரிகள் கல்வியின் அவசியத்தை விளக்குகின்றன.

**கல்வி விளக்கம்**

கல்வி என்ற சொல்லுக்கு கிரியாவின் தற்கால தமிழ அகராதி முறைப்படுத்தப்பட்ட அறிவு, படித்து பெரும் அறிவு என்று விளக்கம் கூறுகிறது. வாழ்நாட்களில் எவ்வளவு செல்வத்தை ஒருவர் பெற்றிருந்தாலும் கல்விச்செல்வம் இல்லையேல் அவரை இவ்வுலகம் மாக்களாகவே கருதுகின்றன. அதனாலேயே தான் அவை கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று பாடியுள்ளார் .

ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்களுள் இளையவன் கற்றால் தாய்க்கு அவன் மீது மதிப்பு கூடும். அரசனும் அவன் வழியிலேயே நடப்பான் என்று புறநானூறு தெரிவிக்கிறது. எனவே கல்வி என்பது உயர்நிலைக்கு கொண்டு செல்லக்கூடிய ஒரு ஆயுதம். அறியாமை அகற்றும் மந்திரக்கோல். கற்றால் மட்டும் போதாது அதன் வழியில் நடக்க வேண்டும்.

“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றவை எவை” (திருக். 400)

என்கிறார். மேலும் தோண்ட தோண்ட நீர் உருவது போல கற்க கற்க தான் அறிவு வளரும் என்று அய்யன் வள்ளுவர் கூறுகிறார்.

“ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்” (உலகநீதி.1)

“இளமையில் கல்” (ஆத்திசூடி 29)

‘’எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்” (கொ.வேந்தன் 91)

‘’கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி”( கொ.வேந்தன்23)

“கற்றது கைமண்ணளவு கல்லாதது உலக அளவு” ”(ஔவை. த.பா1)

“கல்வி கரையில கற்பவர் நாள்

சில மெல்ல நினைக்கின் பிணிபல” (நாலடி. 135)

என்று கூறினார். கல்வின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. ஏராளமான செல்வத்தைப் பிள்ளைக்கு தருவதிலும் சீரானது கல்வி மட்டும் தான் எவ்வளவு செல்வந்தராகஇருந்தாலும் தான் கற்ற கல்வியை சொத்தாக கொடுக்கவும் முடியாது, பெறவும் முடியாது. ஆதலால் தான் கல்வி சிறப்பு வாய்ந்த அணிகலன்களாக கருதப்படுகின்றதனை,

அரும்பரிசு ஆயிரம் கொடுத்தாலும்
பிள்ளைக்கு பெரும் பரிசு கல்வி

என்ற வரிகள் உணர்த்துகின்றன .

“மன்னனும் மாசற கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையவன்
மன்னருக்கு தன் தேசம் அல்லாமல் சிறப்பில்லை
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு” (மூது. 26)

என்ற வரிகள் மன்னன் தன் நாட்டிற்கு மட்டுமே சிறப்பு வாய்ந்தவன். ஆனால், கற்றவருக்கு தேசம் எல்லாம் சிறப்பாகும்.

கல்வி ஏழைகளுக்கு செல்வமாகவும், பணக்காரர்கள் அணிகலன்களாகவும், வீட்டிற்கு விளக்காகவும், நாட்டிற்கு நன்மை உண்டாக்கும் சொத்தாகவும் இருக்கிறது. அத்தகைய அணையா விளக்கை உள்ளத்தில் ஏற்றி அறியாமை இருளை விரட்ட வேண்டும். பிறப்பு முதல் இறப்பு வரை ஒரு மனிதனுக்கு துணையாக வருவது தான் கற்ற கல்வியை என்பதனை,

“ஒருமைக்கண் தான் கற்று கல்வி ஒருவருக்கு

எழுமையும் ஏமாப்பு டைத்து”(392)

என்ற குறட்பாவின் மூலம் அய்யன் திருவள்ளுவர் அழகாக எடுத்துரைத்துள்ளார்.

யாரெல்லாம் புத்தகங்களை நோக்கித் தனக்கு தலை குனிக்கிறார்களோ அவர்களை நாளை இந்த உலகம் வியந்து போற்றும். இன்று தலை குனிந்து படிப்பதெல்லாம் நாளை தலை நிமிர்ந்து வாழ்வதற்கே இன்று இமை விழித்துக் கற்பதெல்லாம் நாளை சுமை ஒழிந்து வாழ்வதற்கே இன்று விரல்வழியில் எழுதுவதெல்லாம் நாளை குறள் வழியில் வாழ்வதற்கு என்பதனை உணர்த்துகின்றன.

கற்றதோடு மட்டும் நிற்காமல் அந்நூல்கள் காட்டிய வழியில் சென்று கல்வி கற்பது தான்

கற்றோரின் கடமை. கருத்துலக பகவான்களின் கனமான சிந்தனைகள் ஏராளமாக கொட்டி கிடக்கின்றன. படிப்பதன் மூலமும் படித்தபடி நடப்பதன் மூலம் சிறப்பு பெறலாம். கல்லாதவரைப் பற்றி அறிஞர்கள்

“அறிவே கல்வியாம் அறிவிலார் குடும்பம்
நெறி காணாமல் நின்று படி விழும்
படிப்புலர் நிறைந்த குடித்தனம்
நரம்பின நரம்பினில் துடிப்புலார்
நிறைந்த சூடு காடு
எல்லா நலமும் ஈந்திடும் கல்வி
இல்லா வீடு இருண்ட வீடு” (இருண்ட வீடு.33)

“கண்ணுடையார் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லா தவர்” (திருக். 393)

என்ற நீதி நூல்கள் கல்லாதவரின் நிலையை எடுத்துக்காட்டுகின்றன.

**கல்வியின் நிலை அன்றும் இன்றும்**

மனிதர்களாகப் பிறந்த அனைவருக்கும் கல்வி கற்கும் உரிமை பண்டைத் தமிழ் சமுதாயத்தில் இருந்துள்ளது. பொதுவாக எல்லோருக்கும் எழுதவும் ,படிக்கவும், கணித அறிவு பெறவும் கற்றுத்தரப்பட்ட கல்வியே பொது கல்வியாகும். மகளிர் பலர் பொதுக் கல்வி பெற்றவர்களாக இருந்ததோடு சிறந்த அரசவைப் புலவர்களாலும் விளங்கியுள்ளனர். இக்காலத்தில் கல்வித்துறை என்னும் அரசியல் துறை அக்காலத்தில் இல்லை. மக்களின் தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களுக்கு பொருள் கொடுத்தும், தொண்டு செய்தும் கல்வி கற்று வந்துள்ளனர். இதனை புறநானூறு,

“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே” (புறம்.183)

என்று கூறுகிறது.

“ஒருமைக்கண் தாம் பெற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமா புடைத்து” (திருக். 398)

என்றும் ,

விலங்கோடு மக்கள் அணையர் இலங்கு நூல்
கற்றாரோ டனை யவர் “(திருக். 410)

என்றும் குறிப்பிடுகிறார் மாதானுபங்கி. இவ்வாறு கல்வி கேள்வி இல்லாதவரை ஆண், பெண் பேதம் பாராமல் விலங்குகளோடும், இறந்தவர்களோடும் வைத்து எண்ணுகின்றார் திருவள்ளுவர்.

மனிதனுக்கு உண்மையான அழகு எண்ணாகிய கணக்கியலறிவும் எழுத்தாகிய இலக்கியலறிவும் பெற்றிருப்பதே அழகு என்கிறார் திருவள்ளுவர். இதனை,

“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு” “(திருக். 392)

என்கிறார். மேலும் சமண முனிவர்கள் இயற்றிய நாலடியார் நூலில் கல்வியின் சிறப்பை நாலடியார் ,

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல_ நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு" (நாலடி.131)

என்று நாலடியார் நவிழ்கின்றது. இவ்வாறு அனைவரும் கல்வி கற்ற நிலை இடைக்காலத்தில் மாறியது. ஆண்கள் மட்டும் கல்வி கற்க வேண்டும் பெண்கள் கல்வி கற்க கூடாது என்ற நிலை இருந்தது இதனை மாற்றியவர் பாவேந்தர் பாரதிதாசன் .

"கல்வி கற்காத பெண்கள் களர் நிலம்
அந்நிலத்தில் புல் விளைந்திடலாம்"
நல்ல புதல்வர்கள் விளைய மாட்டார்கள்"        (பாரதிதாசன்குடும்பவிளக்கு)

என்ற அரும்பெரும் கருத்துக்களை மக்கள் மனதில் விருச்சமாய் புதைத்தவர். மனித வாழ்க்கையின் மகத்துவமான அடைய கல்வி பெரும் ஊன்றுகோலாக திகழ்கிறது. கற்கை நன்றே என்றும் 'இளமையில் கல் முதுமையில் மண்' என்றும், பல்வேறுபட்ட புகழ் மொழிகளுக்குள் கல்வியின் சிறப்பை எடுத்துரைக்கின்றன

இன்றைய மாணவர்கள் திருக்குறளை பள்ளிகளில், கல்லூரிகளில் ,செய்யுள் பகுதிகளில் கற்கின்றனர். அவர்களுக்கு திருக்குறள் வெறும் மனப்பாடப் பகுதியாக அமைக்கப்பட்டு மதிப்பெண் பெரும் நோக்கத்திற்காகவே படிக்கின்ற நிலை மாணவர்களின் உள்ளங்களில் ஓங்கி உள்ளது. இது மாற்றப்பட்டு அறத்தை போதிக்கும் ஒரு நூலாக மாற்றப்படுதல் வேண்டும்.

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"  (திருக். 391)

என்ற வரிகளில் வள்ளுவம் குற்றமற்ற கல்வியை ஐயம் இன்றி கற்று அறியாமையை நீக்கி அந்தஅறிவின்படி வாழ்க்கையில் பின்பற்றி நடக்கச் சொல்கிறார். இது ஏட்டுக்கல்வியாக மட்டுமில்லாமல் எதிர்வரும் காலத்தில் பின்பற்றி வாழ வலியுறுத்தப்பட வேண்டும் என்பது அவரின் அவா.

"யாதனும் நாடாமல் ஊராமல் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு" (திருக்.397)

கல்வி கற்கும் வழக்கம் தொல்காப்பியர் கால முதலே இருந்து வந்துள்ளது என்பதனை,

"ஓதல் வகையே தூது இவை பிரிவேர்"( தொல் அகம் 27)

அவற்றுள்,

ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" (சொல். அகம் 28)

"உயர்ந்தோர்க்கு உரிய ஒத்தி னான" (தொல் 33)

என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

தொன்றுதொட்டுத் தமிழ் இலக்கியங்கள் கல்வியின் சிறப்பைப் பலவாறு விளக்கியுள்ளன. எடுத்துக்காட்டாக,

கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி உரை செய்யும்
கற்றறி காட்டக் கயலுள ஆக்குமே (திரு.மந் 291)

திருமூலர் வலியுறுத்தியுள்ளார்.

கல்வி கற்ற அறிவுள்ளவர்கள் கல்வி பெற்ற அறிவுடையவர்கள் உள்ளத்தில் சிறப்பாக ஒரு கண் இருப்பதை உணர்வர் கல்வி கற்றவர் ஆராய்ந்து சொல்பவள் பாலை நிலத்திலே கயல் மீனை பிரளச்செய்தல் போல நன்மை உருவாக்கும் அதாவது கல்வியால் நிறைந்தவர் வாழும் நாடு வளம் இல்லாத இருப்பினும் அதை வளமாக்கும் திறமை அவர்களுக்கு உண்டு கல்வி திறமைகளை வளர்க்கும் அல்லது தெரிவுகளை வளர்ப்பது கல்வியின் சிறப்பாகும் என்பது தெளிவாகிறது.

**முடிவுரை**

திருக்குறளில் கல்வியில் சிந்தனைகள் என்ற தலைப்பில் கல்வி தான் ஏற்படும் பெருமை , செய்திகளும் கல்லாதவரின் உள்ளத்தில் ஏற்றி அறியாமல் என்ற இருளை விரட்டும் கேடயமாக கல்வி திகழ்கிறது . ஏராளமான சிந்தனைகள் ஏராளமாக திருக்குறளில் கொட்டி கிடக்கின்றன. படிப்பதன் மூலமும், படித்த படி நடப்பதன் மூலமே சிறப்பு பெறலாம் . பார் போற்ற புவியியல் பெயர் விளங்க கசடறக் கற்பது அவசியமாகிறது என்பது இக்கட்டுரையின் வாயிலாகத் தெளிவாகிறது.

**துணை நின்றவை**

1. திருக்குறள் தெளிவுரை - க.ப.அறவாணன், தமிழ்க்கோட்டம்,சென்னை 2007
2. பாரதியார் கவிதைகள், முனைவர். மெய்யப்பன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
3.உலகநீதி-உலகநாதர்
4.கொன்றைவேந்தன்-ஔவையார்
5. ஆத்திகூடி - ஔவையார்
6. திருக்குறள் - பரிமேலழகர் உரை.
7.நாலடியார்-சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம்.
8. பாரதிதாசன் கவிதைகள் - மணிவாசகர் பதிப்பகம், சென்னை.